# ‘50,000 ???? ????????? ???????? ????????????????’ ?????????????? ???????? ??????? ??????? ???? ???????? ????????



முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் மர்மமான முறையில் தீப்பற்றி உயிரிழந்த சிறுமி ஹிஷாலினியின் உறவினர்களுக்கு அழுத்தம் கொடுத்த மூத்த பொலிஸ் அதிகாரி தொடர்பான விரிவான விசாரணையை பொலிஸ் திணைக்களம் தொடங்கியுள்ளது. அவர் கைதாகவும் வாய்ப்புள்ளதாக சிங்கள ஊடகங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மூத்த அதிகாரி, சிறுமியின் உறவினர்களை சந்தித்து, “அமைச்சரும் அவரது குடும்பத்தினரும் மிக முக்கியமான நபர்கள்” என்று கூறினார். “அவர்கள் இது போன்ற செயல்களைச் செய்வதில்லை. இந்த விவகாரத்தை தொடர்ந்து இழுக்க வேண்டிய அவசியமில்லை. இதை காவல்துறைக்கு எடுத்துச் செல்லத் தேவையில்லை. ஐம்பதாயிரம் ரூபாயைப் பெற்று இதை முடித்துக் கொள்வோம். இது ஒரு சாதாரண தற்கொலை. அதை இழுத்துச் செல்ல வேண்டாம் என்று அந்த அதிகாரி ஹிஷாலியின் சகோதரர்களுக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் அழுத்தம் கொடுத்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

ஹிஷாலியின் மரணத்திற்குப் பிறகு அவரது சகோதரர்கள் உட்பட நெருங்கிய உறவினர்கள் பொலிஸாரிடம் அளித்த வாக்குமூலங்களில் இந்த அதிகாரி கொடுத்த அழுத்தம் பற்றிய தகவல்கள் தெரியவந்தது.

பின்னர், அதிகாரியைக் கண்டுபிடிக்க ஒரு சிறப்பு பொலிஸ் குழு விசாரணையைத் தொடங்கியது. அந்த அதிகாரி பொலிஸ் தலைமையகத்தில் பணியில் இருந்த மூத்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் என்பது தெரியவந்தது என செய்தி வெளியிட்டுள்ள சிங்கள ஊடகங்கள், முஸ்லிம் பொலிஸ் அதிகாரியொருவரின் பெயரை இந்த விவகாரத்தில் இணைத்து செய்தி வெளியிட்டுள்ளன.

அதிகாரியின் தொலைபேசி பதிவுகளின் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அவர் விசாரிக்கப்படுவார் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த அதிகாரி ரிஷாத் பதியுதீனின் முன்னாள் பாதுகாவலர். அவர் பதியுதீன் குடும்பத்தின் நெருங்கிய நண்பர்.

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் ஹிஷாலினி தீயில் எரிந்ததும், பதியுதீனின் மனைவியின் தந்தை, அந்த பொலிஸ் அதிகாரியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நடந்த சம்பவம் குறித்து தகவல் கொடுத்தார்.

பொலிஸ் அதிகாரி உடனே பதியுதீனின் வீட்டுக்குச் சென்று அந்த நேரத்தில் அங்கிருந்த ஹிஷாலியின் உறவினர்களைச் சந்தித்து சம்பவத்தை மறைக்க அவர்களுக்கு அழுத்தம் கொடுத்தது தெரியவந்துள்ளதாக அந்த செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாட்சிகளை மிரட்டுவது மற்றும் இலஞ்சம் கொடுக்க முயன்றது உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளின் பேரில் அந்த பொலிஸ் அதிகாரியை கைது செய்ய விசாரணை நடந்து வருவதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

# ???????? ???????????????? ?????????????? ???????? ??????????? ???????????????? ???????????



காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் சர்வதேச நீதிகோரி அவர்களது உறவுகளினால் கவனயீர்ப்பு போராட்டமொன்று இன்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினரால் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'எமது உறவுகள் எங்கே?', 'எமது உறவுகளைத் தேடுவது தேசவிரோமதா?', 'எனது உறவுகள் எமக்கு வேண்டும்' போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தி கவனயீர்ப்பு போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போராட்டக்காரர்கள், " நாம் போராடும் இந்த பல்கலைக்கழகத்தில் வைத்தே எமது பிள்ளைகளை பிடித்துச் சென்றனர்.

அவர்களுக்கான முடிவு இதுவரையில் கிடைக்கவில்லை. இதே அரசாங்கம்தான் அப்போது பிடித்துச் சென்றது.

மேலும் இந்த விடயத்தில் அரசாங்கம் உரிய பதிலை வழங்குவதாக இல்லை. ஆகையால் சர்வதேசம் எமக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்கு உதவ வேண்டும்" என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

---

# ?????? ??????? ?????????????? ????? ???????????????? ??????? ??????? ??????????




யாழ்ப்பாணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், கவனயீர்ப்பு போராட்டமொன்றினை இன்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுத்திருந்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்க தலைவி திருமதி சிவபாதம் இளங்கோதை தலைமையில், யாழ்ப்பாண அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கு முன்பாக குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

யுத்தம் நிறைவடைந்து 12 வருடங்கள் கடந்துள்ள போதிலும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என்பதை முன்னிறுத்தியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மேலும் சர்வதேசத்தின் ஆதரவுடன் இடம்பெற்ற யுத்தத்தில்தான் தமது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டோர் என்றும் ஆகவே சர்வதேசம்தான் இதற்கு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் காணாமல்போன தமது பிள்ளைகளை தம்மிடம் ஒப்படைக்க உரிய நடவடிக்கையை சர்வதேசம் முன்னெடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் முன்வைத்தனர்.

அத்துடன் இதற்கு பின்னரும் தங்களுக்கு உரிய தீர்வை வழங்காவிட்டால், கடலினுள் மூழ்கி உயிரை விடுவோம் என ஆர்ப்பாட்டக்காரர்கள் எச்சரித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக கடந்த சில காலங்களாக ஒவ்வொரு 30ஆம் திகதியும் மேற்கொள்கின்ற போராட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

---


# ?????????




-தந்திரீகன்-

சிறிலங்காவில் பயங்கரவாத தடைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 42 ஆண்டுகள் முழுதாக நிறைவுக்கு வந்துவிட்டது. 1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சிப்பீடமேறிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தினை 1979ஆம் ஆண்டு ஜுலை 19ஆம் திகதி அவசர அவசரமாக கொண்டுவந்து நிறைவேற்றியிருந்தது.

1972 ஆம் ஆண்டின் குற்றவியல் நீதி ஆணைக்குழுக்கள் சட்டம், 1972ஆம் ஆண்டின் செலாவணி கட்டுப்பாட்டு (திருத்த) சட்டம் மற்றும் 1978 ஆம் ஆண்டின் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மற்றும் அதனையொத்த ஏனைய இயக்கங்களைத் தடைசெய்யும் சட்டம் ஆகியவற்றில் காணப்பட்ட ஏற்பாடுகள் சிலவற்றை உள்ளீர்த்து அவசரகால ஒழுங்கு விதிகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தாது பயங்கரவாத சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருந்து.



அவ்வாறு தயாரிக்கப்பட்ட சட்டமூலமானது, பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் சம்பிரதாயங்கள் அனைத்தையும் புறமொதுக்கிய வகையில் சமர்ப்பிக்கப்பட்டது. குறிப்பாக, சட்டமூலமொன்று பாராளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டால் அதுபற்றி அபிப்பிராயத்தினை உயர்நீதிமன்றத்திடத்தில் சபாநாயகர் கோருவது பாராளுமன்ற சம்பிரதாயங்களில் மிகவும் முக்கியமானதொன்றாகும்.

ஆனால், பயங்கரவாத தடைச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டபோது அவ்விதமான எந்த நடைமுறைகளும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. 1979 ஜூலை 19ஆம் திகதி பகல் உணவிற்குப் பின்னர், பாராளுமன்றம் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதாக சபாநாயகர் அறிவித்தார்.

அப்போதைய பாராளுமன்ற விவகார அமைச்சர் வின்சன்ட் பெரேரா அன்றைய தினமே அச்சட்டமூலம் நிறைவேற்றப்படக்கூடியதாக நிலையியற்கட்டளைகள் நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென பிரேரித்தார். அதற்கு சபை அனுமதி வழங்கியது. நீதி அமைச்சர் கே.டபிள்யூ தேவநாயகம் அச்சட்டமூலத்தை அறிமுகம் செய்து உரையாற்றினார்.அதன்பின்னர் ஆளும் எதிர்க்கட்சிகளின் வாதப்பிரதிவாதங்கள் ஒப்புக்காக நடைபெற்றன. குறித்த சட்டமூல விவதத்தின்போது ஜே.ஆரின் இரும்புக்கர ஆட்சிக்கு எதிராகவும் குறித்த சட்டமூலத்தினால் ஏற்படப்போகும் விளைவுகள் மற்றும் சட்டமூலம் நிறைவேற்றப்பட முயலும் முறை தொடர்பாகவும் கடுமையான விமர்சனங்களை துணிச்சலாக முன்வைத்தவர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த மைத்திரிபால சேனநாயக்க.

இவர், தனது உரையின்போது, குறித்த சட்டம் இயற்றுவதற்கு முன்னதாக ஜே.ஆர்.அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களின் பணிப்பில் யாழ்.சென்ற குண்டர்கள் 11இளைஞர்களை பண்ணையில் வைத்து சித்திரவதைக்குட்படுத்தி கொலை செய்தமையைச் சுட்டிக்காட்டியதோடு, இந்த பயங்கரவாத தடைச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு பிராந்தியத்தில் ஹிட்லர் ஆட்சி நிலவும் என்று குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு வருடங்களில், மக்களின் அடிப்படை உரிமைகளில் ஏதாவதொன்றை பறித்துக்கொள்ள முயன்ற

ஒவ்வொரு சட்டமூலமும் தேசிய நலனில் அவசர முக்கியத்துவமிக்கதாக விபரிக்கப்பட்டு, எந்த மக்களின் வாக்குகள் அரசாங்கத்திற்கு இம் மிகப் பெரிய பெரும்பான்மை கிடைப்பதற்கு உதவியதோ, அதே பொரும்பான்மையை பயன்படுத்தி அந்த மக்களின் முதுகிற்கு பின்னால் இந்தச்சட்டமும் அவசரமாக நிறைவேற்றப்பட்டு அடிமைச்சாசனம் எழுதப்படுகின்றது” என்று எச்சரித்தார்.

அந்த வாதவிவாதங்களின் ஈற்றில் அச்சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு அன்றிரவு 9.45 வரை தொடர்ந்து நடைபெற்றது. அமைச்சர் தேவநாயகம் தமது தொகுப்புரையை நிகழ்த்துவதற்கு இரவு 9.58 மணிக்கு எழுந்து நின்றார். தொடர்ந்து முன்றாம் வாசிப்பும் நடைபெற்று சட்டமூலம் எல்லா நிலைகளிலும் நிறைவேறியது.

பாராளுமன்ற ஜனநாயகத்தில் சட்டமூலமொன்றின் மீது வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்ததன் பின்னர் உயர்நீதிமன்றத்தினது, அல்லது எதிர்க்கட்சியனது முன்மொழிவுகளை பெற்று குழுநிலையில் வாக்கியம் வாக்கியமாக படிக்கப்பட்டு திருத்தப்பட்ட பின்னரே குறித்த சட்டமூலத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெறுவது மரபாகும். இந்த சட்டமூலம் கொண்டுவரப்பட்டபோதே உயர்நீதிமன்றத்தின் அபிப்பிராயம் கோரப்பட்டிருக்கவில்லை. அதாவது ஜனநாயகத்தின் தூண்களின் ஒன்றான நீதித்துறை நிராகரிக்கப்பட்டது. அடுத்து பாராளுமன்ற ஜனநாயகத்தின் பிரகாரம் எதிர்க்கட்சிகளின் ஆகக்குறைந்த கோரிக்கைகள் கூட உள்வாங்கப்படவில்லை.

அதன் மூலம் ஜனநாயகத்தின் ஏனைய தூண்களில் ஒன்றான நிறைவேற்றுத்துறையின் இச்சைகளை செயற்படுத்தும் ‘பொம்மையாகவே’ ஜனநாயகத்தின் மற்றத்தூணான சட்டவாக்கத்துறை செயற்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இந்த நிலையில் குறித்த தினமன்று பயங்கரவாததடைச் சட்டத்தோடு தொடர்பில்லாத, பொது மக்கள் பாதுகாப்பு கட்;டளைச் சட்டத்தின் கீழான ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு, இரவு 10.25 மணியளவில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. அதன் பின்னர், 1982ஆம் ஆண்டில் 10ஆம் இலக்க சட்ட மூலத்தின் மூலம் பயங்கரவாத தடைச்சட்டமானது நிரந்தரச் சட்டமாக்கப்பட்டது.
குறித்த பயங்கரவாத தடைச்சட்டம் நிறைவேற்றப்பட்டபோது எதிர்க்கட்சித்தலைவராக இருந்தவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம். இவர் பயங்கரவாத தடைச்சட்டம் மீதான வாக்கெடுப்பில் பங்கேற்றிருக்கவில்லை. இதற்கான காரணம் பற்றி இற்றைவரையில் வெளிப்படையான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதில்லை.

நான்கு தசாப்தங்களாக பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக போரடிவரும், அதனை நீக்க வேண்டும் என்று கோசங்களை எழுப்பிவரும் தமிழினத்தின் ‘தளபதியாக’ இன்றும் போற்றப்படும் அமிர்தலிங்கம் ஏன் இந்த சட்டமூலத்தினை எதிர்த்து வாக்களிக்கவில்லை. இதுவொரு வரலாற்று முக்கியமான விடயமாகும்.

ஒரு இனம் குறித்த சட்டத்திற்கு எதிராக நான்கு தசாப்தமாக போராடிவரும் நிலையில் அந்த இனத்தின் ஆணைபெற்ற தலைமை ஏன்வாக்களிக்கவில்லை என்பது மிகவும் முக்கியமானதொரு விடயமும் கூட. உண்மையிலேயே குறித்த சட்டமூலம் தற்காலிகமாகவே கொண்டுவரப்படுகின்றது.
ஆகவே அதனை குழப்பும் வகையில் எதிர்த்து வாக்களித்தால் பாராளுமன்றத்தினை கலைத்துவிட்டு ஜனாதிபதி ஆட்சியை முன்னெடுப்பேன் என்று ஜே.ஆர்.ஜயவர்த்தன அமிர்தலிங்கத்தினை வாக்கெடுப்பிற்கு சற்று முன்னதாக எச்சரித்திருந்தார்.
அவ்வாறு பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தால் அமிர்தலிங்கத்தின் எதிர்க்கட்சித்தலைவர் பதவி பறிபோயிருக்கும். அதன் காரணத்தினாலேயே அன்று அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி வாக்களித்திருக்கவில்லை.

இதற்கு தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருக்கும் இரா.சம்பந்தன் சாட்சி. அவர்

இதயசுத்தியுடன் இதனை ஏற்றுக்கொள்வது அரசியல் தர்மம். அதனை அவர் செய்வரா? என்பது அவருக்கு ஆணை வழங்கிய மக்களுக்கும், அவருக்கும் உள்ள தனிப்பட்ட பிரச்சினை மட்டுமல்ல. இனமொன்றின் பிரச்சினையாகும்.



இதேபோன்றுதான் 2015ஆம் ஆண்டு மைத்திரி-ரணில் கூட்டு ஆட்சிக்கு முண்டு கொடுத்த தருணத்தில் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என்று அப்போது வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர ஐ.நா.வின் 36ஆவது கூட்டத்தொடரில் சர்வதேசத்தின் முன்னாள் வாக்குறுதி அளித்தார். அதனைச் செயற்படுத்த அப்போது நீதி அமைச்சராக இருந்த ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ முனைந்தார். அவர் பயங்கரவாத தடுப்புச் சட்டம் என்பதற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற பெயரில் புதிய சட்டத்தினை வரைந்தார்.

இருப்பினும், அப்போது ரணிலின் வலது கையாகவிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்தின் குறித்த சட்டத்தினை மிக வலிமையாக்க வேண்டும் என்று தனது சகபாடியான ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரட்ணவுடன் இணைந்து மறுசீரமைப்பு செய்ய விளைந்தமையால் அதன் ஆபத்துக்கள் வெளிப்படவும் குறித்த சட்டம் கிடப்பில் போடப்பட்டது.

தற்போது இந்த சட்டத்தினால் மிகமோசமாக பாதிக்கப்பட்ட இனமாக தமிழினம் இருக்கின்றது. ஆனால் இந்த சட்டத்தினை அறிமுகப்படுத்தியதிலிருந்து தற்போது வரையில் நடைமுறையில் இருப்பதற்கு தமிழர்களே காரணமாக இருக்கின்றார்கள் என்றால் பலர் மூக்கின் மேல் கையை வைப்பார்கள்.

ஆனாலும், உண்மை அதுவே. பயங்கரவாத தடைச்சட்டத்தினை அறிமுகம் செய்தவர் அப்போதைய நீதி அமைச்சர் கே.டபிள்யூ தேவநாயகம். அவர் ஒரு தமிழர். இந்தச் சட்டத்தினை எதிர்க்காது விட்ட எதிர்க்கட்சித்தலைவர் அமிர்தலிங்கம் ஒரு தமிழர். பின்னர் இந்த சட்டத்தின் கீழ் முதலாவது வழக்கினை தொடர்ந்த அப்போதைய சட்டமா அதிபர் சிவா பசுபதி ஒரு தமிழர். பின்னர் பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்குவதற்கு வாக்குறுதி அளிக்கப்பட்டபோதும் அதற்கு பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோதும் அமைதியாக இருந்தவர் சம்பந்தன் ஒரு தமிழர். குறித்த சட்டத்தினை மாற்றி அமைப்பதற்கு முனைந்தபோது அதில் இழுபறி ஏற்படக்காரண கர்த்தாவாகியவர் சுமந்திரன் என்ற தமிழர்.

ஆக, தமிழர்களால் தான் பயங்கரவாத தடைச்சட்டம் தற்போதுவரையில் அமுலில் இருக்கின்றது. இதன் கோரங்களையும் தமிழனம் அனுபவித்துவிட்ட நிலையில் இனியாவது, தமிழனத்திற்கான பரிகாரமாக குறித்த சட்டமூலத்தினை நீக்க வேண்டும் என்பதில் ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மானம், ஐ.நா.அரங்கு உள்ளிட்ட சர்வதேச தரப்புக்கள் உறுதியாக இருக்கும் நிலையில் உள்நாட்டில் தமிழினத்தின் பிரதிநிதிகள் உறுதியான அழுத்தங்களை வழங்கி மாற்றி அமைக்க வேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால், தமிழினத்துக்கு எதிரான சட்டம் நீட்சி பெறுவதற்கு அதன் பிரதிநிதிகளே காரணகர்த்தாக்கள் என்ற வரலாற்றுக்களை துடைத்தெறியப்படாது தொடர்ந்துகொண்டே இருக்கும். இனவிடுதலையில் அதுவொரு சாபக்கேடாகவே நீட்சிபெறும்.

---

# ????????????? ?????? ?? ??? ????? ?????? ?????????? ????????????????????; ??????????? ????????? ?????



பணிப்பெண்ணான 16 வயது சிறுமியின் மரணம் தொடர்பான வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை சந்தேக நபராக பெயரிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டமா அதிபர் நேற்று (26) கொழும்பு நீதிவான் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

இதற்கிடையில், நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணிப்பெண் தீக்காயங்களுக்கு உள்ளாகி மரணமானமை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள ரிஷாட் பதியுதீனின் மனைவி உட்பட நான்கு சந்தேகநபர்கள்

எதிர்வரும் ஒகஸ்ட் 9ஆம் திகதி வரை விளக்கமறியிலில் வைக்கப்பட்டுள்ளனர்.

புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த வழக்கில் ரிஷாட் பதியுதீனை சந்தேக நபராக பெயரிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி மன்றாடியார் நாயகம் திலீப பீரிஸ் தெரிவித்தார்.

ரிஷாத் பதியுதீனுக்கு 16 வயதில் மகள் ஒருவர் இருக்கும்போது அதே வயதையொத்த ஒரு சிறுமியை பணிக்கு அமர்த்துவது தொடர்பில் அவர் ஏன் சிந்திக்கவில்லை என்று பிரதி மன்றாடியார் நாயகம் வினவினார்.

சிறுமி மரணம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள நால்வர் மீதும் வன்கொடுமை, சிறுமியை பணிக்கு அமர்த்தியமை, கடத்தல் ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. சிறுமி தீக்காயங்களிற்குள்ளான உடனேயே அவரை வைத்தியசாலையில் அனுமதிக்காமல், தாமதமாக அனுமதித்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

ரிஷாத் பதியுதீன் வீட்டில் பல வாகனங்கள் நின்ற போதும், அவற்றில் சிறுமியை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லாமல், 119 அவசர சேவைக்கு அழைப்பேற்படுத்தி, நோயாளர் காவு வண்டி வந்த பின்னரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையும் பிரதி மன்றாடியார் நாயகம் சுட்டிக்காட்டினார்.

சிறுமி காலை 6.45 மணிக்கு தீக்காயமடைந்த போதும், 8.30 மணிக்கே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ரிஷாத் வீட்டிலிருந்து 15-20 நிமிடத்தில் வைத்தியசாலையை அடைய முடியுமென்ற போதும், நீண்ட தாமதம் நிலவியதை சுட்டிக்காட்டப்பட்டது.

சிறுமி தங்கியிருந்த அறையில் ஒரு லைட்டர் மற்றும் மண்ணெண்ணெய் போத்தல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த வீட்டில் முன்பு பணிபுரிந்த ஒரு ஊழியர் இந்த வீட்டில் மண்ணெண்ணெய் பயன்படுத்தப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்திருந்தார்.


அத்துடன், ரிஷாத் பதியுதீனின் மாமனார், மரணம் தொடர்பான தகவல்களை திரிவுபடுத்திய குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்கிறார். தீக்காயமடைந்த ஹிசாலினி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, அவரது பெயரை மாற்றி, சிங்கள மொழி பெயரை போல இஷாலினி என பதிவு செய்யப்பட்டது, அவரது வயதை 18 என பதிவு செய்யப்பட்ட தகவல்களையும் பிரதி மன்றாடியார் நாயகம் சுட்டிக்காட்டினார்.

ரிஷாத் பதியுதீன் வீட்டில் 8 சிசிரிவி கமராக்கள் செயற்பட்ட போதும், சிறுமி தீக்காயமடைந்த பின்னர், அவற்றில் 6 நிறுத்தப்பட்டதும் சுட்டிக்காட்டப்பட்டு, முன்னாள் அமைச்சரின் குடும்பத்தினரின் செயற்பாடு குறித்து அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

அந்த கமராக்களை மொரட்டுவ பல்கலைகழகத்திற்கு அனுப்பி ஏதேனும் காட்சிகள் அழிக்கப்பட்டுள்ளதாக என்பதை ஆராய வேண்டுமென பொலிசார் விண்ணப்பித்தனர். அதை நீதிமன்றம் ஏற்று உத்தரவு வழக்கியது. சிறுமியின் உடலை மீண்டும் தோண்டியெடுத்து, பிரேத பரிசோதனை நடத்த மூத்த தடயவியல் மருத்துவ அதிகாரிகள் அடங்கிய நிபுணர் குழுவை நியமிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.

முக்கியமான பிரமுகர் வீட்டில் மிருகத்திற்கு கூட வழங்கப்படாத வசதியற்ற இடத்தில் அந்த சிறுமி தங்க வைக்கப்பட்டிருந்ததாக பிரதி மன்றாடியார் நாயகம் தெரிவித்தார்.

# ??????????? ????? ??????? ?????????????? ??????????? ??????? ?????????



நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த நிலையில் உயிரிழந்த ஹிஷாலினியின் சடலம்

அடக்கம் செய்யப்பட்டுள்ள மயானத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவிற்கு அமைய சிறுமியின் சடலம் இன்று தோண்டியெடுக்கப்படவுள்ள நிலையில் இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

சிறுமியின்  சடலத்தை தோண்டி எடுத்து மீண்டும் பிரேத பரிசோதனையை நடத்த அனுமதி வழங்குமாறு பொலிஸாரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

குறித்த கோரிக்கைக்கு கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திரா ஜயசூரிய நேற்று அனுமதி வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# ???? ???????????????? ???????? ??????? ???????? ????????? ???????????? ?????????? ???????!



யாழ் மாவட்டத்திற்கு தமிழ் பேச முடியாத ஒருவரை மாவட்ட அரசாங்க அதிபரை பதவிக்கு நியமிக்கப்பட இருப்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

யாழ் மாவட்டத்தில் 95% மானவர்கள் தமிழ் பேசும் சமூகத்தினராவர், மேலும் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய நிர்வாகத்தினை சேர்ந்தவர்களும் தமிழ் பேசும் சமூகத்தினை சார்ந்தவர்களாவார்கள் என சுட்டிக்காட்டி இந்த கடிதத்தை எழுதியுள்ளார்.

இந்நிலையில் தமிழ் பேசத்தெரியாத அதிகாரியை மாவட்ட அரசாங்க அதிபராக நியமிப்பது பொருத்தமற்றது என்றும் அது ஜனநாயக விரோதமான செயற்பாடு என்றும் இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான பூர்வீக இடங்களான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய அரசியலமைப்பின் ஊடாக அதியுச்ச அதிகார பகிர்வினை வழங்க அரசாங்கம் முயற்சிகளை எடுக்கும் சந்தர்ப்பத்தில் இத்தகைய செயற்பாடுகள் எதிர்மறையான விளைவினை ஏற்படுத்தும் இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அத்தகைய பிரேரணையை மீளாய்வு செய்து, மேற்குறித்த விடயங்களை கருத்திக்கொண்டு யாழ் மாவட்டத்தின் அரசாங்க அதிபராக அனுபவமும் செயற்திறனுமுள்ள தமிழ் பேசும் ஒரு அரச அதிகாரியை நியமிக்குமாறு இரா.சம்பந்தன் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

# ????????? ????????? ??? ????????? ?????? ????????????? ??????????? ????????????? ???? ????????????? ?????????? ?????????!




## ??????? ???? ????????, ?????????? ?????????? ????? ??????? ?????




1893 இனப்படுகொலை நாளான கறுப்பு யூலையை நினைவு கூரும் முகமாக இன்று பிரித்தானியாவில் ஒன்றிணைந்த இரண்டாம் தலைமுறையை சேர்ந்த தமிழ் இளையோர், பிரித்தானிய பிரதமருக்கு மனு ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்.

இந்த மனுவில், “38 ஆண்டுகளாகியும் கறுப்பு யூலை இனப்படுகொலைக்கு நீதி கிடைக்காமல் தவிக்கும் நிலையில் தமிழ் இளையோராகிய நாங்கள், இலங்கை இராணுவத்தளபதி சவேந்திரசில்வா உள்ளிட்ட போர்க்குற்றவாளிகளை பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடைவிதிப்பு அதிகாரசபையின் கீழ் (Global Human Rights Sanction Regime) தடை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலம், தமிழ்மக்களுக்கு நீதி வழங்குவதாக பிரித்தானியா கொடுத்த வாக்குறுதியை நிரூபித்துக்காட்ட வேண்டும்” என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட யுத்தகுற்றங்கள் மற்றும் மனிதநேயத்தைக்கு எதிரான குற்றங்களில் சவேந்திர சில்வா தொடர்புபட்டிருப்பதற்பான நம்பகமான ஆதாரங்கள் அடிப்படையில் கடந்த வருடம் சவேந்திரசில்வா மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் மீது அமெரிக்கா பயணத்தடை விதித்திருந்தது.

கடந்த ஏப்பிரல் 2021 இல், சர்வதேச மனித உரிமை அமைப்பான ITJP, சவேந்திர சில்வாவின் யுத்த குற்றங்களுக்கான்ஆதாரங்களை உள்ளடக்கிய 50 பக்க அறிக்கை ஒன்றை பிரிந்தானிய அரசிடம் சமர்ப்பித்து, அவரை தடை செய்யும்படி கோரியிருந்தது.

இதுபோல, மே 2021 இல் ICPPG என்ற அமைப்பு, இலங்கையில் மிக அண்மையில் சவேந்திர சில்வாவின் கட்டளையின் கீழ் இராணுவத்தால் சித்திரவதை செய்யப்பட்ட 100க்கு மேற்பட்டவர்களின் வாக்குமூலங்களின் அடிப்படையில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து, தொடரும் சித்திரவதைகளுக்கு காரணமான சவேந்திர சில்வா பிரித்தானிய அரசால் தடைசெய்யப்படவேண்டும் என்று கோரியருந்தனர்.

மேலும், தமிழ் இளையோரின் முயற்சியால், கடந்த 18 மே 2021 அன்று பிரித்தானிய பாராளுமன்றில் ஸ்கொட்லாந்து தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான மக்லோக்லின் ஆன் (Hon. McLaughlin Anne) அவர்களால் சவேந்திரசில்வா உள்ளிட்ட போர்க்குற்றவாளிகளை பிரித்தானியா தடை செய்வதற்கு உடன் நடவடிக்கை எடுப்பதுடன் சர்வதேச மனித உரிமைகள் விடயத்தில் பிரித்தானியா தனது உறுதியான நிலைப்பாட்டை முன்னிறுத்த வேண்டுமென்பதை உள்ளடக்கிய முன்பிரேரணை (EDM 64) ஒன்று கொண்டுவரப்பட்டது.

இதனை தொடர்ந்து, இந்த போராட்டத்தை முழுமையாக தங்கள் கையில் எடுத்துள்ள இரண்டாம் தலைமுறை தமிழ் இளையோர், இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் தொடர்பு கொண்டு, தொடர் சந்தப்புக்களை நடாத்தி, பிரித்தானிய அரசிற்கு அழுத்தம் வழங்கும் படியும் குறித்த முன்பிரேரணைக்கு ஆதரவாக கையெழுத்து இடும் படி கோரி வருகின்றனர். இதன் விளைவாக இதுவரை 29 பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக திரட்டியுள்ளனர்.

https://edm.parliament.uk/early-day-motion/58497

அண்மையில் தொழிற்கட்சியின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களிற்கான நிழல் அமைச்சர் கௌரவ ஸ்ரிபன் கினோக் (Rt Hon. Stephen Kinnock) அவர்களுடனும் இந்த இளையோர் நடாத்திய சந்திப்பின் விளைவாக அவரும் சவேந்திரசில்வா மீது GSR இன் கீழ் பயணத்தடை உள்ளிட்ட தடைகளை விதிக்க கோரியிருந்தார்.

இவ்வாறு இந்த இளந்தலைமுறையினர் தாமாக முன்வந்து, முன்னெடுத்து செல்லும் இந்த போராட்டத்தின் அடுத்த கட்டமாகவே இன்று பிரித்தானிய பிரதமருக்கு இன்று மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

எனவே பிரித்தானிய வாழ் தமிழ் மக்கள் அனைவரும் இத்துடன் இணைக்கப்பட்ட கடிதத்தினை தத்தமது பாராளுமன்ற உறுப்பினர்களிற்கு மின்னஞ்சல் அனுப்பி அவர்களின் ஆதரவினைக் கோருமாறு ICPPG யின் ஊடக இணைப்பாளர் திருமதி. கிறிஸ்ரி நிலானி கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன் மக்கள் அனைவரும் அமைப்பு பேதங்கள் இன்றி ஒன்று திரண்டு இந்த முயற்சிக்கு ஆதரவு தரும்படியும் கோரிக்கை விடுத்துள்ளனர்.இது நடைமுறைச்சாத்தியமான இலக்கு மட்டுமன்றி எங்கள் ஒற்றுமையின் பலத்தை மீண்டும் நிரூபிக்கவும் சோர்ந்து போன எமது சமூகத்தை உற்சாகமூட்டவும் ஒரு நல்ல சந்தர்ப்பமாகும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அத்துடன் இளையோராகிய தங்களால் ஆரம்பிக்கப்பட்ட கீழே உள்ள, இணைய வழி கையெழுத்துப் போராட்டத்திற்கும் தங்களின் ஆதரவினை வழங்குமாறும் கோரியுள்ளார்கள்.

https://www.change.org/p/time-for-the-uk-to-sanction-sri-lanka-s-army-commander-war-criminal-shavendra-silva

INTERNATIONAL CENTRE FOR PREVENTION AND PROSECUTION OF GENOCIDE
Company Registration No.: 11143022
Head Office : 227, Basement Office, Preston Road, Wembley HA9 8NF, UK
Telephone: +44 (0)786 913 3073 , +44 (0)785 230 4397
email: icppgec@gmail.com website:icppg.org

The Rt. Hon. Boris Johnson MP,
Prime Minister,
No 10 Downing Street,
London,
SW1A 2AA

23rd July 2021

Dear Prime Minister,

**ON THE 38TH ANNIVERSARY OF THE BLACK JULY 1983 GENOCIDE OF TAMILS IN SRI LANKA, WE URGE THE UK GOVERNMENT TO PROVE ITS COMMITMENT TO DELIVER JUSTICE TO THE TAMIL VICTIMS BY TAKING STEPS TO SANCTION GENERAL SHAVENDRA SILVA**

Whilst we mourn the 38th Anniversary of the Black July 1983 Genocide of Tamils in Sri Lanka without justice yet, we, the undersigned recent victims of the systematic torture and sexual violence by the Sri Lankan army, family members of the enforced disappeared and representatives of the International Centre for Prevention and Prosecution of Genocide (ICPPG) submit this petition to your urgent action.

We write on behalf of the victims living in the UK and abroad to call upon the UK to sanction the notorious war criminal General Shavendra Silva, who is the current Acting Chief of Defence Staff and Commander of the Sri Lankan Army[1].

The ICPPG is an International Non-Governmental Organisation with no political affiliation and independent body representing the victims of torture, sexual violence, war crimes and Genocide being committed in Sri Lanka. We collect and document testimonies in order to assist the UN and other independent investigators who assist the victims in seeking accountability and justice.

We understand that the International Truth and Justice Project (ITJP) a credible human rights organization has compiled a 50-page dossier which it has submitted to the Sanctions Department of the UK's Foreign Commonwealth and Development Office (FCDO) on General Shavendra Silva in April 2021. The submission argues why Silva, who is Sri Lanka's current Army Commander, should be designated under the United Kingdom's Global Human Rights (GHR) Sanctions Regime established on 6 July 2020[2].

We note that the ITJP submission details General Shavendra Silva's role in the perpetration of gross human rights violations including of the right to life when he was the 58 Division commanders during the final phase of the civil war in 2009 in the north of Sri Lanka. It draws on searing eyewitness testimony from Tamils who survived the government shelling and bombing of hospitals and food queues in the so called No Fire Zones, many of whom now reside in the UK as refugees. The submission also looks at Silva's alleged involvement in torture and sexual violence, including rape, which is a priority area of the UK Government's foreign policy.

[1] https://www.army.lk/commander#:~:text=General%20LHSC%20Silva%20WWV%20RWP,General%20with%20effect%20from%20the
[2] https://itjpsl.com/assets/press/Final-english-press-release-shavendra-magnitsky.pdf

# NAMATHU EELANADU E-PAPER -JULY-2021



# ???????? ????; ?????????????????? ???? ?????? ??????? ???????????? ???????????




தமிழர்கள் மீதான அரசின் இனப்படுகொலைக்கு நீதி கோரி யாழில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இன்று (வெள்ளிக்கிழமை) காலை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக குறித்த கவனயீர்ப்பு போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

கருப்பு ஜூலை 23 நினைவு நாளை நினைவுகூர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணி முதல் 11 மணி வரை இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், கறுப்பு ஜூலை தமிழினப் படுகொலை நாள், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே?, இன அழிப்புக்கு நீதி வேண்டும், அரசியல் கைதிகளை விடுதலை செய், வெளியேறு இராணுவமே வெளியேறு உள்ளிட்ட பல்வேறு கோசங்களை எழுப்பினர்.

குறித்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# ???????? ?????; ??????????????????? ???? ?????? ??????? ????????????? ????????????

தமிழர்கள் மீதான அரசின் இனப்படுகொலைக்கு நீதி கோரி யாழில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இன்று (வெள்ளிக்கிழமை) காலை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக குறித்த கவனயீர்ப்பு போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

கருப்பு ஜூலை 23 நினைவு நாளை நினைவுகூர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணி முதல் 11 மணி வரை இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், கறுப்பு ஜூலை தமிழினப் படுகொலை நாள், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே?, இன அழிப்புக்கு நீதி வேண்டும், அரசியல் கைதிகளை விடுதலை செய், வெளியேறு இராணுவமே வெளியேறு உள்ளிட்ட பல்வேறு கோசங்களை எழுப்பினர்.

குறித்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

---

# ???????? ????? ?????????????? ??????? ??????? ??????????????????? ??????????? ??????????????







தமிழர்களுக்கு எதிரான சிங்களன பேரினவாதத்தின் திட்டமிட்ட இன அழிப்புக்களில் ஒன்றான கறுப்பு

ஜூலையின் 38 ஆவது ஆண்டு நாளான இன்று லண்டனில் ஒன்று திரண்ட தமிழர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரித்தானி பிரதமர் வாசஸ்தல முன்னறில் ஒன்று திரண்ட பெருமளவிலான புலம்பெயர் தமிழர்கள், சிறீலங்கா இனவாத அரசின் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு நீதி கோரி கோஷங்களை எழுப்பியதுடன்இ தமிழர் தாயகத்தில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்களை நிறுத்துமாறும் வலியுறுத்தினர்.

இதேவேளை, பிரித்தானிய பிரதமருக்கு இளையோரினால் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. அதில் “38 ஆண்டுகளாகியும் கறுப்பு யூலை இனப்படுகொலைக்கு நீதி கிடைக்காமல் தவிக்கும் நிலையில் தமிழ் இளையோராகிய நாங்கள், இலங்கை இராணுவத்தளபதி சவேந்திரசில்வா உள்ளிட்ட போர்க்குற்றவாளிகளை பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடைவிதிப்பு அதிகாரசபையின் கீழ் (Global Human Rights Sanction Regime) தடை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலம்இ தமிழ்மக்களுக்கு நீதி வழங்குவதாக பிரித்தானியா கொடுத்த வாக்குறுதியை நிரூபித்துக்காட்ட வேண்டும்” என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.




Boycott Sri Lanka
Because
Tamil
Eelam
the only


10